தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1982 பிப்ரவரி 13.

மாசி 1, துன்மதி, திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''பருவந்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத் தீராமை ஆர்க்கும் கயிறு.''

காலத்தின் போக்கினை உணர்ந்து அதற்குப் பொருந்த ஒழுகுவது தம்மை விட்டு நீங்காது இருக்குமாறு செல்வத்தை இழுத்துக் கட்டும் கயிறாகும்.

குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்.

காவிரி நீர் பிரச்சினை.

*திரு. ப. நெடுமாறன்: சார், கர்நாடக முதலமைச்சர் குண்டுராவ் அவர்கள் அந்தச் சட்டசபையில் காவிரி நீர் பற்றி ஒரு கருத்தைச் சொல்லியிருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இது முக்கியமான ஒரு பிரச்சனை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகையில் வந்த செய்தியை வைத்து உடனடியாக அதற்குப் பதில் சொல்ல முடியாது. அதோடு இன்றைக்கு 12-00 மணிக்குள் பேரவை நிகழ்ச்சிகளை முடித்தாக வேண்டும். ஆகவே, நாளை இந்தப் பிரச்சனையை எடுத்துக்கொள்ளலாம்.

2. அரசினர் தீர்மானம்.

''பால் கமிஷன்'' பரிந்துரைகள் மீதும், அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பால் கமிஷன் அறிக்கை மீதான விவாதம். திரு. சங்கரய்யா அவர்கள்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். எங்கள் கட்சியின் சார்பில் பேசுவதற்கு நான் பெயர் கொடுத்திருந்தேன். பால் கமிஷன் அறிக்கைமீது பேசுவதற்கு எங்கள் கட்சியில் யாருக்கும் வாய்ப்புக் கொடுக்கவில்லை. ஆகவே, தாங்கள் என்னைப் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டுகிறேன்.